திரு. கே. டி. கே. தங்கமணி : பில்லை இன்ட்ரொடக்ஷன் பண்ணினாலும் கூட, இது எப்படி ஏற்றுக்கொள்ளப்படும் என்ற விஷயங்கள் . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றி எல்லாம் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசிக்கொள்ளலாம்.

5. அறிக்கை அளித்தல்

(அ) வினா எண் 299-க்கு போடப்பட்ட துணை வினாவிற்கு அளித்த விடையைத் திருத்தி அரிசன நல அமைச்சர் அளித்த அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 4—3—1972-ம் நாளன்று 299-ம் எண் வினாவிற்கு திரு. க. நாகராசன் அவர்களால் எழுப்பப்பட்ட துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையைச் சரிசெய்ய மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அந்த 299-ம் வினாவிற்கான துணைக் கேள்விக்கு அளித்த விடையைத் திருத்தி அறிக்கை @ ஒன்று மேஜைமீது வைக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) துறை மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) துறையின் மீதான மேற்படி குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிப்பார்.

THIRU PALANIVEL RAJAN : Sir, I rise to present the report of the Estimates Committee on Hindu Religious and Charitable Endowments Administration Department.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு சட்ட நுணுக்க உதவி, ஆலோசனை வழங்குதல் சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் இந்தச் சட்ட முன்வடிவை அறி உதவி, ஆலோசனை வழங்குதல் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

@ 420-422-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1973-ம் ஆண்டு சென்னை மாநகர் குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1973-ம் ஆண்டு, சென்னை மாநகர் குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

THE HON. THIRU O. P. RAMAN: Sir, 1 move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973."

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU O. P. RAMAN: Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER: The Bill is introduced.